සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**

සමාජ සවිබලගැන්වීම් හා සුබසාධන අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு
**MINISTRY OF SOCIAL EMPOWERMENT AND WELFARE**

| | | |
|---|---|---|
| මගේ අංකය DDD/HO/07/SD/05/01/SK<br>**எனது இல** ....................................................................<br>My No | ඔබේ අංකය<br>**உமது இல** ..............................................<br>Your No | දිනය<br>**திகதி** .........2017.05....02............<br>Date |

சகல மாவட்ட செயலாளர்/மாவட்ட சமுர்த்தி மேலதிக
பணிப்பாளர் தலைமையதிபதிகள்
சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்,
சகல பிரதேச செயலாளர்கள்

<u>சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழகத்தினை மறுசீரமைத்தல் - 2017</u>

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் கீழ் 2004ம் ஆண்டிலிருந்து நாடு பூராகவும் ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழகங்கள் ஊடாக சிறுவர்களின் கலாச்சார மற்றும் இலக்கிய ஆற்றல்களை விருத்தி செய்வதற்கும் ஒருவரையொருவர் மதிக்கக் கூடிய கட்டமைப்பினைக் கொண்ட உணர்வுபூர்வமிக்க மிக்க சிறுவர் சமுகமொன்றினை சமூகத்திற்கு வழங்கும் பொருட்டு கிடைத்த உதவிகள் அதிகமானதாகும்.

02. அதன் பிரகாரம் நாடு பூராகவும் அமைக்கப்பட்டுள்ள சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழகங்களை மறுசீரமைத்து செயற்பாடுள்ளதாக நடாத்தி மற்றும் அடிக்கடி ஒழுங்குபடுத்துகின்ற தரவுத் தொகுதியினை பராமரிக்கும் தேவைப்பாடு உருவாகியுள்ளதுடன் அரசாங்க திணைக்களங்கள் மற்றும் வெளி நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு பல்வேறு வேலைத்திட்டங்கள் சிறுவர் கழகங்கள் ஊடாக செயற்படுத்தப்படுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. ஆகையினால் 2017 மே 15ம் திகதியளவில் தங்களது மாவட்டத்தில் தற்போது செயற்படுகின்ற சிறுவர் கழகத்தினை மறுசீரமைப்பின் பொருட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

03. இணைப்பு இலக்கம் 01 இற்கமைய தங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக அமைப்பு விதிக்கமைய சகல சிறுவர் கழகங்களும் பிரதேச செயலகத்தின் சமுர்த்தி மகாசங்கத்தின் சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழகம் என்ற பெயரில் பதிவு செய்யப்படல் வேண்டும். சிறுவர் கழக அங்கத்துவ விண்ணப்ப படிவங்கள் இணைப்பு இலக்கம் 02 இல் காட்டப்பட்டுள்ளது. சிறுவர் கழக மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் பொருட்டு பிரதேச செயலகப் பிரிவுக்கு ரூபா 20000/= வீதம் என்ற வகையில் மாவட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் விடுவிக்கப்படும்.

**1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya ,Battaramulla**

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අධ්‍යක්ෂ (මානව සම්පත්)<br>பணிப்பாளர் ( மனிதவளம்)<br>Director (Human Resource) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2873802/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 011-2887280 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | **Hot Line: 011- 2887722** |
| E-mail- | dg@divineguma.gov.lk | diradmin@divineguma.gov.lk | finance@divineguma.gov.lk | **Hot Line:0112-885582** | |
| | | **Hot Line : 0112-889007** | | | |

04. இணைப்பு இலக்கம் 03 படிவத்திற்கமைய சிறுவர் கழகங்களின் பதிவுப் பெயர்ப்பட்டியலை பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் பராமரித்துச் செல்ல வேண்டியதுடன் அத்தகவல்களை இணைப்பு இலக்கம் 04 படிவத்திற்கமைய மாவட்டச் செயலகத்தின் ஊடாக ஜீன் மாதம் 05ம் திகதிக்கு முன்னர் தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்புதல் வேண்டும். சிறுவர் கழக அங்கத்தவர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள 06 மாதங்களுக்கொருமுறையாவது தகவல்களை முறைமைப்படுத்தல் வேண்டும். ( இதற்கான email – socialdev@divineguma.gov.lk ஐ பயன்படுத்த முடியும்.)

05. மேலே குறிப்பிடப்பட்ட கால எல்லைக்குள் கெக்குலு சிறுவர் கழகங்களை மறுசீரமைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் முடியுமான சகல சந்தர்ப்பங்களிலும் சிறுவர் உரிமைகள் தொடர்பில் செயற்படும் ஏனைய நிறுவனங்கள் மற்றம் அரசாங்க உத்தியோகத்தர்களை தொடர்புபடுத்திக் கொண்டு சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழகங்களின்பால் சிறுவர்களை அணி திரட்டுவதற்கான படைப்பாக்கமுள்ள சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடலைப் பாதுகாக்கும் பொருட்டு வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்யுமாறும் அறித்தருகின்றேன்.

06. 2017ம் ஆண்டில் சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக கலாச்சார மற்றும் இலக்கியப் போட்டிகளுக்குரிய ஆலோசனைப்படிவங்கள் முன் வரும் நாட்களில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை வினயமுடன் அறியத்தருவதுடன் அதன் பொருட்டு தாங்களும் தங்களது பணியாளர்களும் வழங்கிய ஒத்துழைப்பினைப் போற்றி மதிக்கின்றேன்.

நீல் பண்டார ஹப்புஹின்ன
பணிப்பாளர் தலைமையதிபதி

பிரதிகள்:-

| | | |
|---|---|---|
| 01. செயலாளர், சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு | - | த.கூ.க.பொருட்டு |
| 02. செயலாளர் சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சு | - | த.கூ.க.பொருட்டு |
| 03. சகல வங்கி வலய முகாமையாளர்கள் | - | த.கூ.க.பொருட்டு |
| 04. சகல மகாசங்க முகாமையாளர்கள் | - | த.கூ.க.பொருட்டும் உ.ந.பொருட்டும் |
| 05. சகல பிரிவுத் தலைவர்கள், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம் | - | த.கூ.க.பொருட்டு |

TARNSLATED BY – M.M.M.JAWHAR(Translator)